**பிப்ரவரி – 25**

# TNPSC துளிகள்

- பிரதம மந்திரி தலைமையிலான பாதுகாப்பு அமைச்சரவைக் குழுவானது அமெரிக்காவிடமிருந்து இந்தியக் கடற்படைக்கு 24 லாக்ஹீட் மார்டின் எம்.எச் - 60 ஆர் கடல் கண்காணிப்புப் பல்பணி ஹெலிகாப்டர்களை (வானூர்திகளை) வாங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா

- வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள குறைகளைச் சரிசெய்யும் நோக்கில் பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனாவில் (Pradhan Mantri Fasal Bima Yojana - PMFBY) பெரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது விவசாயிகளுக்கு விருப்பமான தேர்வாக மாற்றப் பட்டுள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடியால் 2016 ஆம் ஆண்டு பிப்ரவரியில் தொடங்கப்பட்ட PMFBYன் கீழ், கடன் பெறும் விவசாயிகள் இந்தத் திட்டத்தின் கீழ் காப்பீட்டுத் திட்டத்தை எடுக்க வேண்டியது கட்டாயமாகும்.
- தற்போது, மொத்த விவசாயிகளில் 58 சதவீதம் பேர் கடன் பெற்றவர்களாக உள்ளனர்.




## அடுத்தத் தலைமைத் தகவல் ஆணையர்

- பிரதம மந்திரி தலைமையிலான உயர் மட்டக் குழுவானது தற்போது தகவல் ஆணையராகப் பணியாற்றி வரும் முன்னாள் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறைச் செயலாளரான பிமல் ஜூல்கா என்பவரை மத்திய தகவல் ஆணையத்தின் புதிய தலைமைத் தகவல் ஆணையராக (Chief Information Commissioner - CIC) பெரும்பான்மை முடிவின் அடிப்படையில் தேர்வு செய்து உள்ளது.
- இந்தத் தேர்வுக் குழுவானது மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிரதமரால் பரிந்துரைக்கப்படும் மத்திய அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர்

(பொதுவாக மத்திய உள்துறை அமைச்சர்) ஆகியோரைக் கொண்டிருக்கும்.

- கடைசி CIC ஆகப் பதவி வகித்தவர் சுதிர் பார்கவா ஆவார்.

## குற்றவிலக்கு மீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- அரசியல் கட்சிகள் தங்களது வலைத்தளங்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் ஆகியவற்றில் தங்களது வேட்பாளர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளின் விவரங்களைப் பதிவேற்றுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- மிக முக்கியமாக, அவர்கள் (குற்ற வழக்கு உள்ள வேட்பாளர்கள்) ஏன் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் என்பதற்கான காரணங்களை வெளியிடும்படி நீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது. அதேபோல் குற்ற வழக்குப் பதியப்படாதவர்களுக்கு ஏன் வாய்ப்பு (டிக்கெட்) கொடுக்கவில்லை என்பதையும் தெரிவிக்குமாறு இந்திய உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.
- இந்த விவரங்களை வேட்பாளரைத் தேர்ந்தெடுத்த 48 மணி நேரத்திற்குள் அல்லது வேட்புமனு தாக்கல் செய்வதற்கான முதல் தேதிக்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது இதில் எது முதலில் வருகிறதோ அப்பொழுது வெளியிட வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- முகநூல் மற்றும் சுட்டுரை உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் அதிகாரப்பூர்வ சமூக ஊடகத் தளங்களிலும் ஒரு உள்ளூர் பத்திரிக்கை மற்றும் ஒரு தேசிய செய்தித்தாள் ஆகியவற்றிலும் இந்த விவரங்கள் வெளியிடப்பட வேண்டும்.
- 2004 ஆம் ஆண்டில் 24 சதவீத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்ததாகவும் அதுவே 2009 ஆம் ஆண்டில் 30 சதவீத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்ததாகவும் இந்திய உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.
- மேலும், 2014 ஆம் ஆண்டில் 34 சதவீத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்தன. இது 2019 ஆம் ஆண்டில் 43 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- நாட்டின் நலனுக்காக அரசியலில் குற்றத் தன்மையைத் தடுப்பதற்காக ஒரு நெறிமுறையை உருவாக்குமாறு இந்திய உச்ச நீதிமன்றம் தேர்தல் ஆணையத்தைக் கேட்டுக் கொண்டது. அந்தப் பிரச்சினைகளைத் தடுப்பதற்காக உச்ச நீதிமன்றத்தால் 2018 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட "குற்றவியல் வழக்கு உள்ளவர்களை அறிவிக்க வேண்டும்" என்ற உத்தரவு உதவாது என்று இந்தியத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
- தேர்தல் ஆணையமானது 1968 ஆம் ஆண்டின் தேர்தல் சின்னம் தொடர்பான ஆணை அல்லது தேர்தல் நடத்தை விதிமுறைகளைத் (model code of conduct - MCC) திருத்த வில்லை. எனவே அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்பு சட்டப்பூர்வ அனுமதியைப் பெறாது.
- 2018 ஆம் ஆண்டில் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வானது அனைத்து வேட்பாளர்களும் தங்களது குற்றப் பின்னணியை வாக்கெடுப்பிற்கு முன் தேர்தல் ஆணையத்திடம் அறிவிக்க வேண்டும் என்று ஒருமனதாகத் தீர்ப்பளித்ததோடு, வேட்பாளர்களின் குற்றப் பின்னணி குறித்து அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலமாகப் பரவலாக விளம்பரம் செய்ய வேண்டும் என்றும் அது கூறியுள்ளது.
- இந்த நோக்கத்திற்காக முன்னணி செய்தித்தாள்கள் மற்றும் செய்தி அலைவரிசை ஆகியவற்றின் பட்டியலைத் தேர்தல் ஆணையம் வெளியிடவில்லை அல்லது வேட்பாளர்களால் குற்றவியல் பின்னணியை அறிவிப்பதற்கான நேரத்தை தெளிவு படுத்தவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

- இது மக்கள் அதிக அளவில் பயன்படுத்தாத செய்தித்தாள்கள் & செய்தி அலைவரிசை ஆகியவற்றில் தேவையற்ற நேரத்தில் முக்கியமான தகவல்களை வேட்பாளர்கள் வெளியிட வழிவகுத்துள்ளது.

## நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம்

- இந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்திற்குள் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (Central Consumer Protection Authority - CCPA) அமைக்கப்படும் என்று மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் தெரிவித்துள்ளார்.
- CCPA ஆனது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019ன் கீழ் அமைக்கப் படவுள்ளது.
- இது நுகர்வோர் உரிமைகள், நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், தவறான விளம்பரங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் களைய இருக்கின்றது. இது மோசமான மற்றும் கலப்படம் செய்யப்பட்ட தயாரிப்புகளை விற்பனை செய்தால் அதற்கேற்றவாறு அபராதம் விதிக்க இருக்கின்றது.
- தற்போது மின்னணு வணிகம் மற்றும் நேரடி விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்கான ஒழுங்குமுறை அமைப்பு எதுவும் நடைமுறையில் இல்லை.

# மாநிலச் செய்திகள்

## மஹாதாயி தீர்ப்பாயத்தின் தீர்ப்பு

- மஹாதாயி நதிநீர் பிரச்சினை தொடர்பான தீர்ப்பாயத்தின் தீர்ப்பை அறிவிப்பதற்கான ஒரு இடைக்கால தடை உத்தரவை உச்ச நீதிமன்றம் அறிவித்து உள்ளது.
- இந்த நதியின் நீரைப் பகிர்தலானது கர்நாடகா மற்றும் கோவா ஆகிய மாநில அரசுகளுக்கிடையில் ஏற்படும் சர்ச்சைகளுக்குக் காரணமாகும்.




- மலப்பிரபா நதிக்கு நீரைத் திருப்புவதற்காக மஹாதாயி நதியின் துணை நதிகளான கலசா மற்றும் பண்டூரி நதிகளின் குறுக்கே தடுப்புகளை அமைப்பதும் இதில் அடங்கும்.

- மலப்பிரபா நதியானது கிருஷ்ணா நதியின் துணை நதியாகும். இது கர்நாடகா மாநிலத்தின் ஊடாகப் பாய்கின்றது.
- இந்த நதியானது பாகல்கோட் மாவட்டத்தில் கிருஷ்ணா நதியுடன் இணைகின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசியக் கால்பந்து கூட்டமைப்பு 2022

- ஆசியக் கால்பந்து கூட்டமைப்பின் (Asian Football Confederation - AFC) மகளிர் ஆசிய கோப்பை – 2022 என்ற போட்டியை நடத்தும் முதலாவது தெற்காசிய நாடாக இந்தியா பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் AFC 16 வயதுக்குட்பட்டோர் சாம்பியன்ஷிப் போட்டியையும் 2017 ஆம் ஆண்டில் ஃபிஃபா 17 வயதுக்குட்பட்டோர் உலகக் கோப்பை போட்டியையும் இந்தியா நடத்தியது.
- இதற்கு முன்பு 1980 ஆம் ஆண்டில் AFC மகளிர் சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா நடத்தியது.
- இந்தப் போட்டியானது 2018 ஆம் ஆண்டில் ஜோர்டானில் விளையாடப்பட்டது. மேற்கு ஆசிய நாடு என்ற வகையில் முதல் முறையாக இந்தப் போட்டியை ஜோர்டான் நடத்தியது.

## ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி - 2020

- இந்தப் போட்டியில் இந்தியா 5 தங்கம், 6 வெள்ளி மற்றும் 9 வெண்கலம் ஆகியவற்றை வென்றுள்ளது.
- இது இந்தியாவில் உள்ள புது தில்லியில் நடத்தப்பட்டது.
- இந்திய மகளிர் மல்யுத்த வீராங்கனைகளான சரிதா மோர், பிங்கி, திவ்யா கக்ரன் ஆகியோர் இந்தியாவிற்காக தங்கப் பதக்கங்களைப் பெற்றனர்.
- இதற்கு முன்பு, 2018 ஆம் ஆண்டில் கிர்கிஸ்தானின் பிஷ்கெக்கில் நவ்ஜோத் கவுர் என்பவரின் மூலம் மூத்தோர் ஆசிய சாம்பியன்ஷிப் மகளிர் போட்டியில் இந்தியா ஒரே ஒரு தங்கப் பதக்கத்தை மட்டுமே வென்று இருந்தது.
- 2019–20 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக சீனா இந்தப் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப் பட்டுள்ளது.
- கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தின் காரணமாக ஜனநாயகக் கொரிய மக்கள் குடியரசு மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகியவை இந்தப் போட்டியில் பங்கேற்க முடியவில்லை.

# முக்கிய தினங்கள்

## உலக சாரணர் தினம் - பிப்ரவரி 22

- உலக சாரணர் தினமானது 1907 ஆம் ஆண்டில் பிரவுன்சியா தீவில் நடத்தப்பட்ட முதலாவது சாரணர் முகாமை நினைவு கூர்கின்றது.
- சாரணர் மற்றும் அதன் வழிகாட்டல் நிறுவனரான லார்ட் ராபர்ட் பேடன் - பவல் மற்றும் அவரது மனைவி & உலகத் தலைமை வழிகாட்டியான லேடி ஒலேவ் பேடன் - பவல் ஆகியோரின் பிறந்த நாள் என்பதால் இந்தத் தினமானது தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- பேடன் பவல் என்பவர் ஒரு ஆங்கிலேய இராணுவ அதிகாரி, எழுத்தாளர், நிறுவனர் மற்றும் உலக அளவிலான சிறுவர் சாரணர் இயக்கத்தின் முதலாவது தலைமை சாரணர் ஆவார்.
- 1910 ஆம் ஆண்டில் பேடன் - பவல் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று சிறுவர் சாரணர் மன்றத்தை உருவாக்கினார்.




## உலக சிந்தனை தினம் - பிப்ரவரி 22


- உலக சிந்தனை தினமானது ஆண்டுதோறும் பிப்ரவரி 22 அன்று அனைத்துப் பெண் வழிகாட்டிகள் மற்றும் பெண் சாரணர்கள் ஆகியோரால் கொண்டாடப் படுகின்றது. இது முன்னர் சிந்தனை தினம் என்று அழைக்கப்பட்டது.
- இது சாரணர் & வழிகாட்டி அமைப்புகள் மற்றும் உலகெங்கிலும் உள்ள சில சிறுவர்கள் சார்ந்த சங்கங்களால் கொண்டாடப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருப்பொருள், "வாழும் முன்னணி நபர்கள்" என்பதாகும்.




## உலக அமைதி மற்றும் புரிதல் தினம் - பிப்ரவரி 23

- இது 115 ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரி இன்டர்நேஷனல் என்ற அமைப்பு நிறுவப் பட்டதை நினைவு கூர்கின்றது.

- 1905 ஆம் ஆண்டு பிப்ரவரி 23 அன்று பால் ஹாரிஸ், குஸ்டாவஸ் லோஹர், சில்வெஸ்டர் ஷைல் மற்றும் ஹிராம் ஷோரே ஆகியோர் சிகாகோவில் கூடியிருந்த முதல் ரோட்டரி சந்திப்பு இதுவாகும்.
- இந்த ஆண்டுவிழா "உலக அமைதி மற்றும் புரிதல் தினம்" என்று அழைக்கப் படுகின்றது.
- ரோட்டரி இன்டர்நேஷனல் என்ற பெயரானது 1922 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- போலியோவை முடிவுக்கு கொண்டு வந்தது என்பது ரோட்டரி இன்டர்நேஷனலின் மிகவும் புகழ்பெற்ற ஒரு மனிதாபிமான முயற்சியாகும்.




## மத்தியக் கலால் தினம் - பிப்ரவரி 24

- மத்தியக் கலால் மற்றும் உப்புச் சட்டம், 1944 இயற்றப் பட்டதைக் குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் இந்தத் தினமானது கொண்டாடப் படுகின்றது.
- மத்தியக் கலால் மற்றும் சுங்க வாரியமானது (Central Board of Excise and Customs - CBEC) நாடு முழுவதும் மத்தியக் கலால் தினத்தைக் கொண்டாடியது.
- மத்தியக் கலால் மற்றும் சுங்க வாரியம் என்பது மத்திய நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ள வருவாய்த் துறையின் ஒரு பகுதியாகும்.
- இந்த வாரியமானது சுங்கச் சட்டம், 1962, சுங்க கட்டணச் சட்டம், 1975, மத்திய கலால் சட்டம், 1944 மற்றும் சேவை வரிச் சட்டம் ஆகியவற்றைக் கையாள்கின்றது.
- இருப்பினும், 2017 ஆம் ஆண்டு ஜூலை 1 அன்று சரக்கு மற்றும் சேவை வரி (Goods and Services Tax - GST) உருவாக்கப்பட்ட பிறகு, இந்த வாரியத்தின் நடவடிக்கைகள் GST தொடர்பான சட்டங்களால் வழி நடத்தப் படுகின்றன.

### *இது பற்றி*

- முன்னதாக மத்திய கலால் மற்றும் சுங்க வாரியமானது மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வாரியம் என்று அழைக்கப்பட்டது.
- சுங்கம் தொடர்பான சட்டங்களை நிர்வகிப்பதற்காக சுங்க மற்றும் மத்திய கலால் / மத்திய GST துறையானது 1855 ஆம் ஆண்டில் அப்போதைய இந்தியாவின் தலைமை ஆளுநரால் நிறுவப்பட்டது.


सीमा शुल्क एवं केन्द्रीय उत्पाद शुल्क
CUSTOMS AND CENTRAL EXCISE
भारत सरकार
GOVERNMENT OF INDIA
देशसेवार्थ करसंचय
CENTRAL
EXCISE
24
DAY
FEBRUARY
A day, 24th of February, has been decided by the government of India to celebrate this special event all through the country.
The event celebration means to collect tax over the goods and by the people earning over the limit which has been decided according to the terms of Central Excise Act in the year 1944.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★